222001

සියලුම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

අධිකරණ අමාත්‍යාංශය
நீதி அமைச்சு
Ministry of Justice

# சத்தியப்பிரமாணம் செய்தமொழி பெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கான பரீட்சை 2021
# Examination for Appointment to the Post of Sworn Translator - 2021

## மொழி பெயர்ப்பு (தமிழ் /ஆங்கிலம்)
## Translation (Tamil / English)

நேரம் : 1½ மணித்தியாலம்
Duration : 1½ hours

மொத்த புள்ளிகள் : 100
Total Marks : 100

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.
Answer all questions.

---

- பின்வரும் பந்திகளை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கவும்.

1. யூரர்சபையின் துணிபுரையொன்றின்மீது ஆக்கப்பட்ட குற்றத்தீர்ப்புக்கெதிரான ஏதேனும் மேன்முறையீட்டின்மீது, மேன்முறையீட்டு நீதிமன்றம், நியாயமற்றது என்ற அல்லது சான்றைக் கருத்துக்கெடுத்துப்பார்க்கும்போது ஆதாரமளிக்கப்படமுடியாதது என்ற ஏதுவின்மீது அல்லது எந்த நீதிமன்றத்தின் முன்னர் மேன்முறையீட்டாளர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு ஏதேனும் சட்டப்பிரச்சினை பற்றிய பிழையான முடிவாகும் என்ற ஏதுவின்மீது அல்லது நீதிநெறிப் பிறழ்வு காணப்படுகின்றது என்ற ஏதேனும் ஏதுவின்மீது அத்தகைய துணிபுரை தள்ளிவைக்கப்பட வேண்டுமென அது நினைத்தால் மேன்முறையீட்டை அனுமதித்தல் வேண்டும்; அத்துடன், வேறு எவ்விடயத்திலும் மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

ஆயின், நீதிமன்றமானது, மேன்முறையீட்டில் எழுப்பப்பட்ட விடயம் மேன்முறையீட்டாளருக்குச் சாதகமாக முடிவுசெய்யப்படலாம் என அபிப்பிராயப்படுகின்றது என்பது எப்படியிருப்பினும், உண்மையில் கணிசமானளவு நீதிநெறிப்பிறழ்வு ஏற்படவில்லையென அது கருதினால், மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம்.

(புள்ளிகள் 25)

2. பொருள் அல்லது நிகழ்ச்சித் திட்ட உதவியின் கீழான இறக்குமதிகள் அனைத்தும் அரச வங்கிகளினூடாக மட்டும் ஆற்றுப்படுத்தல் வேண்டும். (புறநீங்கல் எதுவுமின்றி எல்லாச் சந்தர்ப்பங்களிலும்) இறக்குமதிகளைத் தழுவும் ஆவணங்கள் அரச வங்கிகளில் ஒன்றினூடாக மட்டும் பெறப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

இறக்குமதிகள் தொடர்புற்ற அனுப்புகை ஆவணங்களின் ஒப்படைப்பை பொறுப்பேற்பதற்கு முன்னர், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எதிரினை நிதியங்கள் வங்கிக்கு முழுமையாகச் செலுத்தப்படுதல் வேண்டும். அரசாங்கத் திணைக்களங்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உரிய தலைப்பு, நிகழ்ச்சித் திட்டம், கருத்திட்டம், செலவு விடய வகுப்பு என்பவற்றின் திரட்டிய நிதிய ஏற்பாட்டில் அல்லது முற்பணக் கணக்கில் பற்று வைத்துக் கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும். கூட்டுரிமையுடைய நிறுவனங்கள்/ பொது தொழில் முயற்சிகள் கொடுப்பனவை அவற்றின் சொந்த நிதியங்களிலிருந்து செய்தல் வேண்டும். கொடுப்பனவைப் பெறும் வங்கியானது, அரசாங்க எதிரிணை நிதியக் கணக்கில் வரவுவைப்பதற்காக, சம்பந்தப்பட்ட தொகையை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கும்.

(புள்ளிகள் 25 )

- **Translate the following passages into Tamil**

(3).

Birth, marriage and death are the standard trio of key events in most people's lives. But only one – marriage – is a matter of choice. Yet many girls, and a smaller number of boys, enter marriage without any chance of exercising their right to choose.

Some are forced into marriage at a very early age. Others are simply too young to make an informed decision about their marriage partner or about the implications of marriage itself. They may have given what passes for 'consent' in the eyes of custom or the law, but in reality, consent to their binding union has been made by others on their behalf.

While early marriage takes many different forms and has various causes, one issue is paramount. Whether it happens to a girl or a boy, early marriage is a violation of human rights. The right to free and full consent to a marriage is recognized in the 1948 Universal Declaration of Human Rights (UDHR) and in many subsequent human rights instruments – consent that cannot be 'free and full' when at least one partner is very immature. For both girls and boys, early marriage has profound physical, intellectual, psychological and emotional impacts, cutting off educational opportunity and chances of personal growth. For girls, in addition, it will almost certainly mean premature pregnancy and childbearing, and is likely to lead to a lifetime of domestic and sexual subservience over which they have no control.

(25 Marks)

(4) .

Section 12 (1) of the Monetary Law Act states the Governor of the CBSL shall be appointed by the President on the recommendation of the Minister of Finance.

Section 16 of the Monetary Law Act provides that, the President may, on the recommendation of the Minister of Finance, remove the Governor of the CBSL if: (i) the Governor becomes disqualified under Section 11 of the Monetary Law Act by reason of becoming a Member of Parliament or a member of a Provincial Council or Local Authority; (ii) by reason of being appointed a Public Officer or a Judicial Officer; or (iii) by reason of being appointed a Director, Officer, Employee or Shareholder of any Banking Institution; or (ii) if the Governor becomes permanently incapable of performing his duties; (iii) if the Governor has done any act or thing which, in the opinion of the President, is of a fraudulent or illegal character or is manifestly opposed to the objects and interests of the CBSL; (iv) if the Governor does not devote his full professional time to the Business of the Bank; or (v) or if the Governor accepts any other office or employment whatsoever whether public or private and whether remunerated or not [but subject to a few specified exemptions].

(25 Marks)